செ.வெ.எண்: 04 நாள்: 02.03.2020

தூத்துக்குடி மாவட்டத்தில் பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்கும் சாலை பாதுகாப்பு மன்றத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

---

தூத்துக்குடி மாவட்டத்தில் பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்கும் சாலை பாதுகாப்பு மன்றத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.03.2020) தொடங்கி வைத்தார். சாலை பாதுகாப்பு குறித்த இணையதளத்தை (http://www.safetuty.org) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் பால கோபாலன், இ.கா.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சாலை பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் அடிப்படை போக்குவரத்து விதிகள், சாலையில் பாதுகாப்பாக பயணிப்பது போன்றவைகளை பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி சாலை பாதுகாப்பு முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் தமிழக அரசு பள்ளி மாணவ, மாணவிகளைக் கொண்டு சாலை பாதுகாப்பு மன்றங்களை தொடங்கி அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் 211 பள்ளிகளில் 6 முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் 100 மாணவ, மாணவிகள் வீதம் 21,100 மாணவ, மாணவிகளை கொண்டு சாலை பாதுகாப்பு மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஆண்டிற்கு 40 மணி நேரம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு வகுப்புகள் எடுக்கப்பட்டு விபத்துகளுக்கான காரணங்கள், பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து மற்ற நபர்களுக்கும் எடுத்துக்கூறும் வகையில் இச்சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே புற்றுநோய், கொரானோ வைரஸ் உள்ளிட்ட நோய்களில் இறப்பவர்களைவிட சாலை விபத்துகளில் இறப்பவர்களே அதிகமாக உள்ளனர். இதை தவிர்க்கவே, சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் அவசியம் ஹெல்மெட் அணிய வேண்டும். கார்களில் செல்பவர்கள் சீட் பெல்ட் அணிய வேண்டும். உடல் பகுதியிலேயே தலை பகுதிதான் மிகவும் பாதுகாக்கப்பட வேண்டியது ஆகும். இருசக்கர வாகன ஓட்டுபவர்கள் மட்டுமின்றி பின்னால் அமர்ந்துள்ளவர்களும் ஹெல்மெட் அணிய வேண்டும். சாலையில் நடந்து செல்லும் பாதசாரிகளும் சாலை விதிமுறைகளை பின்பற்றிட வேண்டும். சாலை விதிமீறல்கள் கல்லூரி மாணவர் மற்றும் மாணவிகளே அதிகமாக உள்ளது. பள்ளியில் பயிலும் நீங்கள் நாளை சாலைகளில் வாகனங்களை ஓட்டும் நிலை வரும்போது நீங்கள் இங்கு கற்கும் விதிமுறைகள் உங்களுக்கு வழிகாட்டியாக அமையும். முந்தைய ஆண்டைக் காட்டிலும் கடந்த ஆண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் சாலை விபத்துகள் 3 சதவிதம் குறைந்துள்ளது. தொடர்ந்து விழிப்புணர்வுகள் ஏற்படுத்தி விபத்தில்லா மாவட்டமாக நமது மாவட்டத்தினை உருவாக்க வேண்டும் என பேசினார்.

நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஞானகௌரி, காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் திரு.குமார், தூத்துக்குடி டவுன் துணை காவல் கண்காணிப்பாளர் திரு.பிரகாஷ், தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.மன்னர்மன்னன், ஹோலி கிராஸ் ஆங்கிலோ இந்தியன் பள்ளி தலைமை ஆசிரியை நிர்மலா மற்றும் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**